DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 185/2024 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **துரைராஜ்** |
| Father's Name | : | ஆண்டியப்பன் |
| Village | : | புல்லாம்பட்டி |
| Taluk | : | சிங்கம்புணரி |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 48/2025 |

**(வழக்கின் 2 வது எதிரி ஆஜர். 1-ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 20.05.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது திருமலைக்குடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு 1 மகன், 1 மகள். அ.சா.1 எனது மனைவி, விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகள் எனது தம்பிகள் ஆவர். என் அப்பாவிற்கு மொத்தம் நான்கு மகன்கள். எங்களுக்குள் சொந்தமான சொத்து சம்மந்தமாக அண்ணன் தம்பிகளுக்குள் ஏற்ககனவே பிரச்சினை உள்ளது. என்னுடைய சொத்தை எனது அப்பாவிற்கு எழுதிக்கொடுத்தேன் எனது அப்பா எனக்கு எழுதிக்கொடுத்தார். அதில் எதிரிகளுக்கும் எனக்கும் விரோதமாவிட்டது. மேற்படி சொத்து சம்மந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது. கடந்த 12.05.2020 தேதி மாதங்கருப்பர் கோவில் அருகே உள்ள எனது அப்பாவின் மின் மோட்டாரில் நான் தண்ணீர் பாய்ச்சிய போது வழக்கின் 1வது எதிரி ஆஜர் 2 வது எதிரியும் சேர்ந்துசொத்தை பிரித்து கொடுக்காமல் ஏன் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சிகிறாய் என பிரச்சினை செய்தார்கள். அவர்கள்

பிரச்சினை செய்ததால் நான் வா்ங்கி போட்ட பியூஸ் கட்டைய பிடுங்கிகொண்டு வந்துவிட்டேன். மறுநாள் மாலை 3.30 மணியளவில் குளத்துப்பட்டியிலிருந்து ஜாமான்கள் வாங்கிக்கொண்டு நானும் என் அக்கா மகனான ராஜகுமாரும் டிவிஎக்சல் வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது மாதங்கருப்பர் கோவில் அருகே வடக்கில் வளைவில் திரும்பும் இடத்தில் நாங்கள் சென்றபோது எதிரிகள் இருசக்கரவாகனத்தில் வந்து எங்களை மறித்து போடா சுன்னி மகனே, புண்டை மகனே என்று சொல்லி பீஸ் கட்டைய எப்படி பிடுங்கின உன்னை உயிருடன் விட்டால் தானே வருவ உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அருவாள், இரும்பு ராடு ஆகியவற்றை வைத்து எதிரிகள் என்னை மாறி மாறி தாக்கினார்கள். 1வது எதிரி கருப்பன் என்னை தலையில் அருவாளால் வெட்டினார். ஆஜர் 2வது எதிரி என்னை பிடித்துக்கொண்டார் நான் தடுத்ததில் எனது இடது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. எதிரிகள் என்னை தாக்கியதில் எனக்கு தலையிலும் கழுத்திலும், தோள்பட்டையிலும், கையிலும் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டது. சாட்சி தனது இடது கை மற்றும் உச்சந்தலை, இடது தோள்பட்டை, கழுத்தின் இடது புறம் உள்ள காயத்தழும்புகளை காட்டுகிறார். சம்பவத்தை பார்த்த எனது அக்கா மகன் ராஜ்குமார் 108 க்கு போன் செய்து என்னை துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு வைத்து எதிரிகளால் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு தையல்கள் போடப்பட்டது. நான் மறுநாள் காலை 5.00 மணிக்கு விழித்து பார்க்கும்போது எனது மனைவியான அ.சா.1 தலையில் கட்டுப்போட்டு மருத்துமனையில் இருந்தார். என்ன நடந்தது என என் மனைவியிடம் கேட்டதற்கு எதிரிகள் எங்கள் வீட்டிற்கு சென்று என் மகனை வெட்டுவதற்காக விரட்டியுள்ளார்கள் அவன் தப்பித்து ஓடியபோது எனது மனைவியையும் தாக்கியுள்ளார்கள். உன் கணவனை வெட்டி கொன்று விட்டோம் நீயும் சாவு என்று சொல்லி எனது மனைவியை தாக்கியுள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் இரும்பு பைப்பை வைத்து தான் ஆஜர் 2 வது எதிரி என்னை தாக்கினார்.

என்னிடம் காட்டப்படும் அருவாள் மற்றும் கட்டையை 1வது எதிரி சம்பவ சமயம் வைத்து என்னை தாக்கினார். இரும்பு பைப் **அ.சா.பொ.**1 ஆகும். அருவாள் **அ.சா.பொ.2** ஆகும். கட்டை **அ.சா.பொ. 3** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து மொத்தம் 4 ஆண்கள் மற்றும் ஒரு பெண் ஆவார்கள். எதிரிகள் இருவரும் என் உடன் பிறந்த தம்பிகள். என் கைவசம் 9 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. எனது அப்பா கடந்த 2018 ம் வருடம் அவர் பெயரில் உள்ள சொத்தை எனது பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் 1997 ல் நான் வாங்கிய சொத்துக்களை தான் என் அப்பாவிற்கு எழுதிக்கொடுத்தேன் என்ற விபரத்தை நான் புகாரிலோ, வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2018 ம் வருடம் எனது அப்பா என்னை ஏமாற்றி சொத்தை எழுதிவாங்கிவிட்டார் என்று புழுதிப்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான் 9 முறை புகார் கொடுத்துள்ளார். போலிசார் விசாரணையில் நான் எனது தம்பிகளுக்கு சொத்தை பிரித்து கொடுக்கிறேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் பங்கு காசு கொடுத்தால் பிரித்துக்கொடுப்பேன் என பிரச்சினைக்கு முன்பாக சொன்னேன். சொத்தை நான் பிரித்துக்கொடுக்கவில்லை என்றால் என் சொத்தை நான் யாருக்கும் பிரித்துக்கொடுக்க முடியாது. என்னுடைய சொத்து என்று காட்டக்கூடிய ஆவணத்தை நான் இந்நீதிமன்றத்திலோ, போலிசார் விசாரணையின்போதோ கொடுத்தேன் என்றால் இல்லை. என் வீடும் வழக்கின் எதிரிகளின் வீடுகளும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். மோட்டார் கேனியில் பீஸ் கேரியரை பிடுங்கியபோது பைப்பையும் நான் வெட்டிவிட்டு வந்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் பீஸ் கேரியரை மட்டும தான் பிடுங்கினேன் அதை தான் விசாரணையில் சொன்னேன். போர் பைப் ஆனது கேனியின் தரைத்தளத்திற்கு உள்ளே உள்ளது என்றால் சரிதான். அந்த பைப்பை வெட்ட வேண்டும் என்றால் கேனியில் படிக்கட்டிலிருந்து 7 அடி தொங்கினால் தான்

தரையில் இறங்கி வெட்ட வேண்டும் என்றால் சரிதான். நான் புகாரிலோ, வாக்குமூலத்திலோ ஆஜர் 2வது எதிரி அ.சா.பொ.1 பைப்பை வைத்திருந்ததாக சொல்லலவில்லை என்றால் சரியல்ல. 2வது எதிரி என்னை பிடித்துக் கொண்டார் என்றும் 1வது எதிரி என்னை வெட்டினார் என்றும் போலிசார் விசாரணையிலோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என் வீட்டிற்கு சென்று என் மனைவியை தாக்கியதாக சொல்லும் விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன விததத்தில் சொன்ன ஆயுதங்களை வைத்து என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்தை பிரித்து தராததால் எதிரிகள் தாக்கல் செய்த சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சொ்த்து சம்மந்தமாக உறவினர்கள் மற்றும் ஊர்க்காரர்கள் சுமார் 15 முறை பஞ்சாயத்து பேசியிருப்பார்கள் என்றால் சரிதான். வழக்கு சாட்சிப்பட்டியலில் கண்ட ராஜ்குமார் எனது அக்கா மகன் என்றாலும் சாட்சி தேவி என் மகள் என்றாலும் கண்ணுற்ற சாட்சி ஆண்டிச்சி என் மாமியார் என்றாலும் சரிதான். நான் தான் கேனியில் தண்ணீர் இல்லாதபோது பைப்பை வெட்டசென்ற போது கீழே விழுந்து எனக்கு மேற்படி காயங்கள் ஏற்பட்டது என்றாலும் எதிரிகளால் எனக்கு எந்த காயங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே எனக்கு மேற்படி சம்பவத்தில் காயங்கள் ஏற்பட்டிருந்தால் நானும் எனது மனைவியான அ.சா.1ம் மருத்துவமனையில் சிகிச்சை எடுக்காமல் ஓடி வந்திருக்கமாட்டோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் என் மனைவியை தாக்கவில்லை என்றாலும் என் மனைவிதான் 2வது எதிரியின் வீட்டிற்கு சென்று 2வது எதிரியையும் தலையில் கட்டையால் தாக்கி காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் என்னை வழிமறித்து என்னை அசிங்கமாக பேசி, தாக்கி கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் எனது மனைவியை தாக்கவில்லை என்றாலும் சரியல்ல. பொதுவாக உள்ள 9 ஏக்கர் சொத்து முழுவதையும் யாருக்கும் பிரித்துக்கொடுக்காமல் நானே வைத்து கொண்டு அதை அபகரிக்கவேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார்

கொடுக்கப்பட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்னவிதத்தில் வழக் குசம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.05.20 05:29:46 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.